மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

மடத்துக்குளம்

அசல் வழக்கு எண்.43/2019

இன்று 2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 24 ம் நாள் இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது பிரிவு ஏற்பாட்டின் படி ) திரு.கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி மொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கந்தசாமி (Dw– 2) |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பொன்னுச்சாமி |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தொழில் | : | |
| வட்டம் | : | மடத்துக்குளம் |
| மாவட்டம் | : | திருப்பூர் |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) நான் கிரையம் பெற்ற காலத்திலேயே முருகேசன் என்பவருக்கு அவரது அப்பா உயில் எழுதி வைத்தாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை அது எனக்கு தெரியாது. நான் எனது முதல் விசாரணையில் தாவா சொத்தை கிரையம் பெற்ற உடன் முருகேசன் என்பவர் தாவா சொத்து குறித்து அவரது தந்தை முருகேசன் என்பவருக்கு உயில் எழுதி வைத்தாக கூறி என் மீதும், 1 ம் பிரதிவாதி முத்துச்சாமி என்பவர் மீதும் உடுமலை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. முருகேசன் என்மீதும், முத்துச்சாமி மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரமே தெரியாது. இந்த வழக்கின் முதல் விசாரணையில் முருகேசன் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியும் எவ்வாறு குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் அதுபற்றி என்னால் குறிப்பிட்டு கூற முடியாது. நான் தாவா சொத்தை கிரையம் பெற்று விவசாயம் செய்து வந்த போது தான்

வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. முருகேசன் எந்த தேதியில் வழக்கு தாக்கல் செய்தார் என்றும் தெரியாது. என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் நான் 3,4 பிரதிவாதிகளுக்கு காட்டை விற்பனை செய்து ஆறு மாதம் கழித்து பிறகுதான் தெரியும். முதல் விசாரணையில் என் மீதும், முத்துச்சாமி மீதும்,

2) தாவா சொத்தை கிரையம் பெற்ற உடனே வழக்கு தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. எனக்கு எதிராக முருகேசன் எப்போது வழக்கு தாக்கல் செய்தார். அதில் என்ன விபரம் குறிப்பிட்டுள்ளார் என்று தெரியாது என்றால் சரிதான். நான் சக்திவேல் பொன்னுச்சாமிக்கு எந்த தேதியில் கிரையம் பேசினேன் என்றால் 10 வருடமானதால் ஞாபகம் இல்லை. 3,4 பிரதிவாதிகளுக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முன்பு வேறு யாரிடம் கிரையம் பேசினேன் என்றால் சிவலிங்கத்திடம் கிரைய ஒப்பந்தம் போட்டேன். தேதி, வருடம் ஞாபகம் இல்லை. அந்த கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டதா? என்றால் பதிவு செய்யப்பட்டது தான். அந்த கிரைய ஒப்பந்தத்தில் சாட்சியாக யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சின்னச்சாமி என்பவரும், முத்துச்சாமி என்பவரும் சாட்சியாக கையெழுத்து போட்டார்கள். எனக்கு காட்டை விற்பனை செய்த முத்துச்சாமி என்பவர் தான் சாட்சி கையொப்பம் போட்டார் என்றால் இல்லை அதுவேறு முத்துச்சாமி. பி.வா.ஆ.11 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா? என்றால் சரிதான். அதற்கு கீழே சிவலிங்கசாமி கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ஒரு சாட்சியாக உள்ள முத்துச்சாமி என்பவர் தான் எனக்கு காட்டை விற்பனை செய்தார் என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதியான முத்துச்சாமியும் சேர்ந்து முருகேசனை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பொதுஅதிகார ஆவணத்தை கொண்டு மேலும் மேலும் வில்லங்க படுத்த வேண்டும் என்ற வகையில் பல்வேறு கிரைய ஒப்பந்ததை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கும், முத்துச்சாமிக்கும் முருகேசனுக்கு அவரது அப்பா சின்னச்சாமி கவுண்டர் உயில் எழுதிவைத்தது தெரிந்து கொண்டு தெரியாது என கூறி வழக்கு நிலுவையில் உள்ள போதே கிரைய ஒப்பந்தம் மற்றும் கிரைய ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

3) முருகேசன் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு முருகேசனின் அப்பா சின்னச்சாமி கவுண்டர் முருகேசனுக்கு என்ன குறிப்பிட்டு உயில் எழுதிவைத்துள்ளார் என்ற விபரத்தை பின்னிட்டு தற்போதாவது தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை. நான் 3,4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை விற்பனை செய்த போது அந்த தாவா சொத்தில் கருப்பராயன் கோவில் உள்ள விபரம் எனக்கு தெரியும். கருப்பராயன் கோவில் உள்ள விபரத்தை குறிப்பிட்டு 3,4 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தேனா? என்றால் ஞாபகம் இல்லை. நான் பொம்மநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். தாவா சொத்து பணத்தம்பட்டியில் உள்ளது. நான் கிரையம் பெற்ற சொத்தில் உள்ள கருப்பராயன் கோவிலை யார் கட்டினார்கள் என்றால் தெரியாது. மேற்படி கருப்பராயன் கோவிலை முருகேசன் அப்பா சின்னச்சாமிகவுண்டர் கட்டி ஊர் பொது மக்களும் சேர்ந்து கட்டி வழிபட்டு வந்தார்கள் என்ற விபரம் தெரியுமா? என்றால் ஆனால் எல்லோரும் வந்து சாமி கும்பிட்டுவிட்டு போவார்கள். மேற்படி சொத்தில் உள்ள கருப்பராயன் கோவிலை சின்னச்சாமிகவுண்டர் தான் உயிருடன் இருந்த வரை பூஜை செய்து கோவிலை பராமரித்து வந்தார் என்றால் அது தெரியாது. மேற்படி சின்னச்சாமிகவுண்டர், முருகேசனுக்கு எழுதிவைத்த உயிலில் தாவா சொத்தில் வரும் வருமானத்தில் கருப்பராயன் கோவிலை பூஜை செய்து பராமரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தார் என்றால், அது பற்றி தெரியவில்லை. தாவா சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு 23.03.2007 அன்று பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து இருந்த நிலையில் 1ம் பிரதிவாதி பொது அதிகார ஆவணத்திற்கு விரோதமாக செயல்பட்டதால் அதை செயல்படுத்த விரும்பாத வாதியின் தகப்பனார் சின்னச்சாமிகவுண்டர் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்கு 21.04.2008 மற்றும் 22.01.2010 ஆகிய தேதிகளில் ஒரு பதிவு செய்யப்பட்ட ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மூன்று வருடங்களாக நான் காடு ஓட்டியபோது யாரும் வரவில்லை.

4) நான் 03.03.2010 ஆம் ஆண்டு கிரையம் பெற்று மீதி முத்திரை தீர்வை கட்டி தொகையை செலுத்தி 28.11.2013 அன்றுதான் பத்திரம் பதிவு செய்யப்பட்டு எனக்கு கிடைத்தது என்றால் இல்லை ஆறு மாதத்தில் கிடைத்தது நானும், முத்துச்சாமியும் சேர்ந்து வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் வேண்டுமென்றே குறைவான முத்திரை

தீர்வை கட்டி சொத்தின் கிரையத்தை தாமதப்படுத்தி சொத்தின் மீது வில்லங்கத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் இல்லை. இந்த வழக்கு நிலுவையில் உள்ள போதே 3,4 பிரதிவாதிகளுக்கு வழக்கு விபரம் தெரிந்தே கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் மூன்று வருட காலம் எனது அனுபவத்தில் வைத்து விவசாயம் செய்து சுவாதீனத்தில் இருந்தேன் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் இல்லை. நான் சொத்துக்களை யார் மூலமாக யார் கேட்டு எவ்வாறு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சிவலிங்கம் என்பவருடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு அவரிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டு சக்திவேல் பொன்னுச்சாமிக்கு கிரையம் செய்து கொடுத்தேன். மேற்படி தாவா சொத்து கிரையம் சம்மந்தப்பட்ட அனைத்து விபரங்களும் சிவலிங்கசாமிக்குத்தான் தெரியும் என்றால் இல்லை பொன்னுச்சாமி, சக்திவேலுக்கும் தெரியும். நான் வழக்கிற்காக முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவலிங்கசாமிக்கு எவ்வளவு கிரைய ஒப்பந்தம் போட்டு முன் தொகை எவ்வளவு என்றால் வாங்கவில்லை. சிவலிங்கசாமியின் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்தேனா? என்றால் ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.11. நானும், சிவலிங்கமும், சேர்ந்து பதிவு செய்து ஒப்பந்தபத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் இரண்டு லட்சம் முன்தொகையும், ஐந்து லட்சத்திற்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

5) அதன்பின்னிட்டு 03.03.2014 ஆம் தேதியன்று 3,4 பிரதிவாதிகள் பெயரில் பி.வா.சா.ஆ.12 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது கிரைய தொகை ரூபாய் எட்டுலட்சத்து ஐம்பதாயிரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும், பெயர் தவறாக குறிப்பிட்டு திருத்தல் பத்திரம் 09.05.2014 ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், முத்துசசாமியும், ஏற்படுத்திய ஆவணம் ஒவ்வொன்றும், திட்டமிட்டு பதிவை தாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் குறைபாடுடன் தயார் செய்யப்பட்டு பதியப்பட்டு பின்பு அது திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி குறைபாட்டுன் திட்டமிட்டு ஆவணத்தை ஏற்படுத்தியதற்கு இந்த வழக்கு நிலுவையில் உள்ளது காரணம் என்றால் சரியல்ல. வாதி முருகேசனின் தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் குறித்து அவர் செயல்படுத்த

விரும்பாத நிலையில் இருந்த போது அவர் சொத்துக்களை பொறுத்து வாதிக்கு உயில் ஆவணம் எழுதிவைத்த  விபரம் தெரிந்து கொண்டு 1ம் பிரதிவாதியும், நானும் கூட்டு சேர்ந்து கொண்டு தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்றும் பொய்யாக ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பொது அதிகார ஆவணம் பெற்று அதன்படி செயல்படாத நிலையில், அவரிடம் இருந்து நான் பெற்ற இந்த கிரையம் செல்லத்தக்கது அல்ல என்றால்சரியல்ல. செல்லாத கிரைய ஆவணத்தை வைத்து 3,4 பிரதிவாதிகள் பெயரில் நான் ஏற்படுத்திய கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.06.24 17:10:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்